
**ஜனவரி – 23**

# TNPSC துளிகள்

- 2025 ஆம் ஆண்டில் சுற்றுலா மேற்கொள்ள மிகவும் உகந்த நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிக்கையின் 52 இடங்களின் பட்டியலில் அசாம் 4வது இடத்தைப் பிடித்துள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் உயிரிச் சிதைவுறுதல் சிப்பமிடல் மையம் ஆனது, கழிவுகளற்ற உயிரி நெகிழியினை உருவாக்குவதற்காக ஒரு மையத்தினை நிறுவி வருகிறது.
- இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) பேராசிரியர் உர்பாசி சின்ஹாவிற்கு, பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் 2025 ஆம் ஆண்டு கேட்ஸ்-கேம்பிரிட்ஜ் தாக்கப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினை சர்வதேச பனிப்பாறைகள் பெரும் பாதுகாப்பு ஆண்டாகவும், 2025 ஆம் ஆண்டு முதல் மார்ச் 21 ஆம் தேதியினை இனிமேல் ஆண்டுதோறும் உலகப் பனிப்பாறைகள் தினமாகவும் கொண்டாட உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்


## மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு




- தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் லிமிடெட் (TNGECL) ஆனது, சூரிய ஆற்றலுக்கான மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பிற்கான (BESS) ஏலத்தினை மிக விரைவில் தொடங்க உள்ளது.
- எரிசக்தி சேமிப்பு அமைப்புகளை (ESS) புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து கிடைக்கப் பெறும் ஆற்றலை மிக நன்கு சேமிப்பதற்கும், மேலும் ஒரு நாளின் உச்ச பட்ச ஆற்றல் பயன்பாட்டு நேரங்களிலும் அவற்றைப் பயன்படுத்தலாம்.
- BESS என்பது சேமிப்புப் பயன்பாட்டிற்காக கிடைக்கப் பெறும் அமைப்புகளில் ஒன்று ஆகும்.
- மத்திய அரசானது, BESS அமைப்பிற்கான மூலதனச் செலவில் சுமார் 30% அல்லது ஒரு மெகாவாட்டிற்கு (MW) 27 லட்சம் ரூபாய் இவற்றில் எது குறைவோ அந்த வகையிலான நிதிசார் நம்பகத் தன்மை இடைவெளி நிரப்பு நிதியை வழங்குகிறது.

- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி தேதி நிலவரப்படி, தமிழ்நாட்டின் நிறுவப் பட்ட புதுப்பிக்கத் தக்க எரிசக்தி திறன் 24,274 மெகாவாட் ஆகும்.
- இதில் காற்றாலை ஆற்றல் 11,409.04 மெகாவாட் மற்றும் சூரிய சக்தி 9,518.37 மெகாவாட் ஆகும்.

## ஆலிவ் ரெட்லி ஆமைகள் உயிரிழப்பு




- ஏராளமான உயிரிழந்த ஆலிவ் ரெட்லி ஆமைகள்/சிற்றாமைகள் தமிழ்நாட்டில், மிக குறிப்பாக சென்னையில் கடற்கரைகளில் ஒதுங்கியுள்ளன.
- ஆலிவ் ரெட்லி ஆமைகள் இனப் பெருக்கத்திற்காக வேண்டி செப்டம்பர்-அக்டோபர் ஆகிய மாதங்களில் தமிழகக் கடற்கரைக்கு அருகில் வருகின்றன.
- அவை முட்டையிடுவதற்காக என்று வலையமைக்கும் காலம் நவம்பர் மாத இறுதியில் தொடங்கி மார்ச் மாதத்தில் முடிவடைகிறது.
- 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம் ஆனது, வலை அமைக்கும் பருவத்தில் நன்கு அடையாளம் காணப்பட்ட வலையமைக்கும் மற்றும் அது இனப்பெருக்கம் செய்யும் இடங்களிலிருந்து ஐந்து கடல் மைல்களுக்குள் இயந்திர மயமாக்கப் பட்ட படகுகள் மூலமான மீன்பிடி நடவடிக்கைகளைத் தடை செய்கிறது.
- இந்தியாவின் கிழக்குக் கடற்கரை மற்றும் மேற்குக் கடற்கரையில் உள்ள பல கடலோர மாநிலங்களில் ஆலிவ் ரெட்லி ஆமைகள் முட்டையிடுகின்றன.
- இருப்பினும், ஒடிசாவில் பெருமளவில் அவை வலையமைக்கின்றன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு பகுதிகளில் வலைகளை அமைக்கின்றன.
- ஒடிசாவின் கஹிர்மாதா மற்றும் ருஷிகுல்யா கடற்கரைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான பெண் ஆலிவ் ரெட்லி ஆமைகளின் வருகை தருகின்றன.

# தேசியச் செய்திகள்


## பிரதமரின் அருங்காட்சியகம் மற்றும் நூலக சங்கம்

- பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் (PMML) சங்கம் மற்றும் நிர்வாகக் குழுவை மத்திய அரசு மறுசீரமைத்துள்ளது.

- முன்னதாக 29 உறுப்பினர்களைக் கொண்டிருந்த நிர்வாகக் குழுவானது, தற்போது 34 உறுப்பினர்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- நிருபேந்திர மிஸ்ரா இந்த அமைப்பின் தலைவராக மீண்டும் ஐந்து ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னாள் மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி, முன்னாள் நிதி ஆயோக் துணைத் தலைவர் இராஜீவ் குமார், ஓய்வு பெற்ற இராணுவத் தலைவர் ஜெனரல் சையத் அதா ஹஸ்னைன், பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் சேகர் கபூர் ஆகியோர் இதன் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.
- பிரதமர் NMML சங்கத்தின் தலைவராகவும், பாதுகாப்புத் துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் அதன் துணைத் தலைவராகவும் உள்ளனர்.




## 6.5 மில்லியன் 'SVAMITVA சொத்து' அட்டைகள்




- 50000க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள சொத்து உரிமையாளர்களுக்கு 'SVAMITVA திட்டத்தின்' கீழ் 65 லட்சத்திற்கும் மேற்பட்ட சொத்து அட்டைகளைப் பிரதமர் வழங்கச் செய்தார்.
- கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் சொத்து அட்டைகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக SVAMITVA திட்டம் தொடங்கப்பட்டது.
- கடந்த 5 ஆண்டுகளில் 1.5 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு SVAMITVA அட்டைகள்

வழங்கப் பட்டுள்ளன.

## AnSI மற்றும் TRI அமைப்புகளின் ஆய்வறிக்கை




- இந்திய மானுடவியல் ஆய்வு மையம் (AnSI) மற்றும் இந்தியப் பழங்குடியின ஆராய்ச்சி நிறுவனங்கள் (TRI-கள்) ஆகியவை, முதன்முறையாக, முந்தைய ஆணையங்கள் ஒரு போதும் வகைப்படுத்தப்படாதவை என்று கருதிய சுமார் 268 சீர் மரபினர், பகுதியளவு நாடோடியாக உள்ள மற்றும் நாடோடியாக உள்ள பழங்குடியினர் பிரிவினை விரிவாக வகைப்படுத்தியுள்ளன.
- இந்த மூன்று ஆண்டு கால ஆய்வு ஆனது நிதி ஆயோக் குழுவினால் தொடங்கப்பட்டது.
- இந்தச் சமூகங்களில் சுமார் 179 சமூகங்களை 26 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் பட்டியலிடப்பட்டச் சாதியினர் (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) (மத்திய) பட்டியல்களில் சேர்க்க பரிந்துரைத்துள்ளது.
- இவற்றில் மிக குறைந்தது 85 சமூகங்கள் இந்தப் பட்டியல்களில் புதிய சேர்க்கைகளாக சேர்க்கப்படப் பரிந்துரைக்கப் படுகின்றன.
- இந்தப் புதியச் சேர்க்கைகளில், 46 சமூகங்கள் OBC அந்தஸ்துக்கும், 29 சமூகங்கள் SC அந்தஸ்துக்கும், 10 சமூகங்கள் ST அந்தஸ்துக்கும் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.
- அதிக எண்ணிக்கையிலான (19) புதியச் சேர்க்கைகள் உத்தரப் பிரதேச மாநிலத்தின் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் பட்டியலில் தலா எட்டு சமூகங்கள் இதில் சேர்க்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.
- இதில் ஆய்வு செய்யப்பட்ட சுமார் 63 சமூகங்கள் (20 சதவீதத்திற்கும் அதிகமானவை) இனி "கண்டறியப் பட முடியாதவை" என்றும் இந்த ஆய்வு முடிவு செய்தது.

## SCOT திட்டம்

- இந்திய விண்வெளிசார் புத்தொழில் நிறுவனமான திகந்தரா நிறுவனம், விண்வெளி அமைப்புகளைக் கண்காணிக்கும் ஒளிப்படக் கருவி (SCOT) செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியுள்ளது.
- சமீபத்தில் திகந்தரா ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிரான்ஸ்போர்ட்டர்-12 திட்டத்தின் மூலம் தனது SCOT செயற்கைக்கோளை விண்ணில் ஏவியது.
- SCOT திட்டம் என்பது உலகின் முதல் வணிக ரீதியான விண்வெளி சூழ்நிலை குறித்த முன்னுணர்வு (SSA) ஆய்வு செயற்கைக் கோள் ஆகும்.

- இது மிகவும் மேம்படுத்தப் பட்ட செயல்திறனுடன் புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதையை (LEO) கண்காணிக்கும்.
- பாதுகாப்பான விண்வெளிச் செயல்பாடுகளை உறுதி செய்வதற்காக பூமியைச் சுற்றி வரும் 5 செ.மீ வரையிலான மிகவும் சிறிய பொருட்களின் கண்காணிப்பை இது உறுதி செய்யும்.
- அதே நாளில், பெங்களூருவில் உள்ள பிக்செல் நிறுவனமானது அதன் ஃபயர்ஃபிளை செயற்கைக் கோள் தொகுப்பின் - இந்தியாவின் முதல் தனியார் செயற்கைக்கோள் தொகுப்பு - முதல் மூன்று செயற்கைக்கோள்களையும் விண்ணில் ஏவியது.




## HAL நிறுவனத்தின் போர் விமான ஒருங்கிணைப்பு அமைப்பு





- ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனமானது, போர் விமானங்கள் ஒருங்கிணைப்பு அமைப்பு (CATS) - Warrior என்ற முழு அளவிலான சோதனை எஞ்சின் தரை வழி ஓட்டச் சோதனையினை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.
- CATS-Warrior என்பது ஒரு ரேடாருக்குப் புலப்படாத வகையிலான ஒரு ஆளில்லா போர் பயன்பாட்டு விமானம் (UCAV) ஆகும் என்பதோடு இது ஒரு loyal wingman எனக் கூறப் படுகின்ற, மனிதர்கள் கொண்ட போர் விமானங்களுடன் இணைந்து செயல்படும் ஒரு விமானமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது திறன்மிகு வான்வெளி எதிர்ப்பு ஆயுதங்கள் (SAAWs) மற்றும் அடுத்த தலைமுறை நுட்பத்திலான இலக்குகளை மிகவும் நெருக்கமான தொலைவில் தாக்கி அழிக்கும் எறிகணைகள் (NG CCMs) ஆகியவற்றை சுமந்து செல்லக் கூடியது.
- CATS-Hunter என்பது எதிரி நாட்டுப் பிரதேசத்திற்குள் மிக அதிக தொலைவில் ஊடுருவி

இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்ட வான்வழியாக ஏவக் கூடிய குறைந்த கண்காணிப்பு அவசியம் கொண்ட சீர்வேக எறிகணை ஆகும்.

- CATS-Infinity வளிமண்டல செயற்கைக்கோள் என்பது சுமார் 70,000 அடி உயரத்தில் நன்கு செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு அதி உயர, சூரிய சக்தியில் இயங்கும் வளி மண்டலச் செயற்கைக்கோள் ஆகும்.
- 90 நாட்கள் நீடித்து உழைக்கும் திறன் கொண்ட இது செயற்கைக்கோள்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்களுக்கு இடையிலான கண்காணிப்பு இடைவெளியைக் குறைக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் அமைப்பின் பங்குதாரர் நாடு




- வளர்ந்து வரும் நாடுகளின் பிரிக்ஸ் அமைப்பின் ஒரு பங்குதாரர் நாடாக நைஜீரியா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பெலாரஸ், பொலிவியா, கியூபா, கஜகஸ்தான், மலேசியா, தாய்லாந்து, உகாண்டா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய சில நாடுகளுடன் இணைந்து, தற்போது நைஜீரியா பிரிக்ஸ் அமைப்பின் ஒன்பதாவது பங்குதார நாடாக மாறியுள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் பிரிக்ஸ் அமைப்பு உருவாக்கப்பட்டதோடு, 2010 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவும் இந்த அமைப்பில் உறுப்பினராக சேர்க்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டில், ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகமும் இந்தக் கூட்டமைப்பில் சேர்ந்த அதே நேரத்தில் சவுதி அரேபியா நாட்டிற்கு இந்தக் கூட்டமைப்பில் சேர அழைப்பு விடுக்கப்பட்டது.
- துருக்கி, அஜர்பைஜான் மற்றும் மலேசியா ஆகிய சில நாடுகள் பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர்களாக சேர அதிகாரப் பூர்வமாக விண்ணப்பித்துள்ளன.

## 47வது அமெரிக்க அதிபர்


- அமெரிக்காவின் 47வது அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றுள்ளார்.
- மிகவும் குறைந்த வெப்பநிலை காரணமாக, கடந்த 40 ஆண்டுகளில் முதல் முறையாக

அமெரிக்காவின் தலைநகர் (வாஷிங்டன்) மாளிகைக்குள்ளேயே விழா நடத்தப்பட்டது.

- அங்கு 19 ஆம் நூற்றாண்டிலிருந்து மறுதேர்தலில் தோல்வியடைந்த பிறகு இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற முதல் அமெரிக்க அதிபர் என்ற ஒரு பெருமையை டிரம்ப் பெற்றுள்ளார்.
- குரோவர் கிளீவ்லாந்து என்பவர் அமெரிக்காவின் 22வது (1885-89) மற்றும் 24வது (1893-97) ஜனாபதிபதி ஆவார்.
- டொனால்ட் டிரம்பின் நிகர சொத்து மதிப்பு 5.6 பில்லியன் டாலராகும்.




## பாரிசு பருவநிலை உடன்படிக்கையில் இருந்து அமெரிக்கா விலகல்





- பாரிசு பருவநிலை மாற்ற உடன்படிக்கையில் இருந்து அமெரிக்க நாட்டை விலக்கிக் கொள்வதற்கான செயலாக்க ஆணையில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டு உள்ளார்.
- டிரம்ப் தலைமையிலான முதல் ஆட்சியானது, 2017 ஆம் ஆண்டின் போது இதேபோன்ற நடவடிக்கையை மேற்கொண்டது, ஆனால் அந்த ஒரு நடவடிக்கையானது உடனடியாக அதிபர் ஜோ பைடன் ஆட்சியின் போது திரும்பப் பெறப்பட்டது.
- அந்த உடன்படிக்கையிலிருந்து அதிகாரப் பூர்வமாக வெளியேறுவதற்கு அமெரிக்கா தற்போது ஓராண்டு காத்திருக்க வேண்டும்.

- சுமார் 196 உறுப்பினர் நாடுகள் அங்கீகரித்த பாரிசு உடன்படிக்கை ஆனது சட்டப்பூர்வ பிணைப்பு கொண்ட ஒப்பந்தம் அல்ல.
- தற்போது ஒப்பந்தத்தின் கீழ் வராத நாடுகளான ஈரான், ஏமன் மற்றும் லிபியாவுடன் அமெரிக்காவும் சேர உள்ளது.
- 2016 ஆம் ஆண்டு முதல், அமெரிக்க கச்சா எண்ணெய் உற்பத்தி 70% அதிகரித்துள்ளது.
- அமெரிக்கா தற்போது உலகின் மிகவும் முன்னணி எண்ணெய் உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக உள்ளது.
- 2035 ஆம் ஆண்டிற்குள் அமெரிக்ககாவின் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தினை 60 சதவீதத்திற்கும் மேலாகக் குறைப்பதற்கு அமெரிக்கா கடந்த மாதம் ஒரு திட்டத்தை உருவாக்கியது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் பிரெஞ்சுப் பொரியல் (French Fries) ஏற்றுமதி 2025




- இந்தியா சுமார் 1,478.73 கோடி ரூபாய் மதிப்புள்ள 135,877 டன் பிரெஞ்சு பிரைஸ் எனும் உணவுப் பொருளை (FF) ஏற்றுமதி செய்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல்-அக்டோபர் மாதங்களில், 1,056.92 கோடி ரூபாய் மதிப்பிலான 106,506 டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இந்திய FF ஏற்றுமதி பெரும்பாலும் தென்கிழக்கு ஆசியா (பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா மற்றும் வியட்நாம்), மத்திய கிழக்கு (சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமன்) மற்றும் ஜப்பான் மற்றும் தைவான் ஆகிய சில நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தியாவின் இதன் ஏற்றுமதியானது அதன் மதிப்பிடப்பட்ட உள்நாட்டு நுகர்வான 100,000 டன்களை விட அதிகமாகும்.
- FF தயாரிப்பிற்கான உருளைக்கிழங்கு வகைகள் என்பன சன்டானா, இன்னோவேட்டர், கென்னெபெக், குஃப்ரி ஃப்ரைசோனா மற்றும் குஃப்ரி ஃப்ரையோ ஆகியனவாகும்.
- சுமார் 60 மில்லியன் டன்கள் (mt) அளவிலான இந்தியாவின் உருளைக்கிழங்கு உற்பத்தியானது 95 மில்லியன் டன்கள் அளவு மதிப்பிலான ஏற்றுமதி மேற்கொள்ளும்

சீனாவிற்கு அடுத்தபடியாக உள்ளது.

- 1992 ஆம் ஆண்டில், அமெரிக்க நாட்டின் பதப்படுத்தப்பட்ட உணவு நிறுவனமான லாம்ப் வெஸ்டன் நிறுவனம், இந்தியாவில் உள்ள நட்சத்திர தங்கும் விடுதிகளுக்கு வழங்குவதற்காக உறைய வைக்கப்பட்ட பிரெஞ்சு பிரைஸ்களை இறக்குமதி செய்யத் தொடங்கியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## விகாஸ் இயந்திரத்தின் மீள் இயக்க செயல்பாட்டுத் திறன்

- இஸ்ரோ நிறுவனமானது அதன் விகாஸ் திரவ இயந்திரத்தினை மீள் இயக்கச் செயல் முறையின் செயல்விளக்கத்தினை மிக வெற்றிகரமாக மேற்கொண்டதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- இஸ்ரோவின் ஏவுகல வாகனங்களின் திரவ எரிபொருள் நிலைகளுக்கு ஆற்றலை வழங்குவதற்கான நம்பகமான செயல்பாட்டு அமைப்பான விகாஸ் இயந்திரம், ஏவுகல நிலை மீட்பு மற்றும் மறுபயன்பாட்டினை செயல்படுத்துவதற்காக மறுவடிவமைக்கப் படுகிறது.
- ஒரு சமீபத்தியச் சோதனையில், இந்த இயந்திரமானது 60 வினாடிகள் எரியூட்டப்பட்டு, பின்னர் 120 வினாடிகளுக்கு அணைக்கப்பட்டது.
- பின்னர் அது வெற்றிகரமாக மீண்டும் இயக்கப்பட்டு சுமார் ஏழு வினாடிகள் மீண்டும் எரியூட்டப் பட்டது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அணுசக்தியின் புதிய சகாப்தம் – IEA

- சர்வதேச எரிசக்தி முகமை (IEA), 'அணுசக்தியின் புதிய சகாப்தம்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தற்போது அணுசக்தியானது உலகளாவிய மின்சார விநியோகத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவான ஆற்றலையே வழங்குகிறது.
- 2024 ஆம் ஆண்டின் இறுதியில், 63 அணு உலைகள் (71 GW) கட்டுமானத்தில் உள்ளன.
- உலகெங்கிலும் சுமார் 40க்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் எரிசக்தி அமைப்புகளில் அணு சக்தியின் பங்கை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளன.

- 2017 ஆம் ஆண்டு முதல், சீனா 25 உலைகளின் கட்டுமானத்தினைத் தொடங்கியுள்ளது என்பதோடு உலகளாவியத் திறனில் 40% அளவு பங்குடன் ரஷ்யாவானது சுமார் 23 உலைகளில், நான்கு ஆற்றல் வழங்கீட்டு நாடுகளில் 99 சதவீதத்திற்கும் அதிகமான செறிவூட்டல் திறன் மேற்கொள்ளப்படுகிறது.
- திட்டமிடப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அணுசக்தியில் மேற்கொள்ளப்பட வேண்டிய வருடாந்திர முதலீடு ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 120 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இரட்டிப்பாக்கப்பட வேண்டும்.





Figure 1.5 Nuclear power capacity under construction by region and national origin of technology, as of December 2024

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடு




- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா 85வது அகில இந்திய சபாநாயகர்கள் / அவைத் தலைவர்கள் மாநாட்டினை (AIPOC) பீகாரின் பாட்னாவில் தொடங்கி வைத்தார்.
- கடைசியாக 1982 ஆம் ஆண்டில் இராதானந்தன் ஜா சபாநாயகராக இருந்த போது பீகாரில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.
- அதற்கு முன்னதாக, இலட்சுமி நாராயண் சுதான்ஷு சட்டமன்ற சபாநாயகராக இருந்த

போது, 1964 ஆம் ஆண்டு ஜனவரி 06 மற்றும் 07 ஆகிய தேதிகளில் அந்த மாநிலம் இந்த மாநாட்டினை நடத்தியது.

- AIPOC மாநாட்டின் முதல் அமர்வு ஆனது 1921 ஆம் ஆண்டில் சிம்லாவில் நடைபெற்றது.
- 84வது AIPOC ஆனது கடந்த ஆண்டு மும்பையில் உள்ள மகாராஷ்டிரா சட்டமன்ற வளாகத்தில் நடைபெற்றது.
- முதலாவது AIPOC அமர்வின் 100 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் 82வது AIPOC ஆனது மீண்டும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சிம்லாவில் நடைபெற்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★